# SRI VAIKUNTANATHA PERUMAL TEMPLE

**Renovation of Temple, Dwajasthambam and Rajagopuram Samprokshanam**

**Palayaseevaram - 631 606.**

## PREAMBLE

Palayaseevaram Village is situated on the northern banks of river Palar 18 k.m. east of Kancheepuram Town on the Chengalpattu - Kancheepuram Bus Route. The existing Sri Lakshminarasimha Swamy Temple is on the slopes of hillock padmagiri adjacent to the river. On the other side of the hillock is the beautiful village of Palayaseevaram. At the centre of the village there is an ancient temple of Lord Sri Vaikuntanatha perumal in a sitting posture with His consorts Sri Devi and Bhoodevi seated on either side of the Lord. This temple was in an utterly dilapidated state.

The Archaeological surevey of Inda. Chennai, has identified 18 Stone inscriptions in the basement of this ruined temple which indicates the date of the temple as 9th century AD pertaining to ruler Parthibendrathipathi and 1st Paranthaga Chola period. The inscription refer to this Vaikuntanatha Perumal as Vinnagara Azhwar.

This village had a very good administration in those days and a rigid selection process of election of village representatives with upright conduct and full accountability to the village sabha. The inscriptions indicate that this Vaikuntanatha perumal temple was the central place of worship in the village and was in existence much earlier to the present day Lakshmi Narasimhan Temple.

Srirangam Srimad Srimushnam, Andavan Swamigal during his visit to the village in Nov.2002 wished and blessed that this temple shall be rebuilt and the exquisite moorthis shall be worshiped with daily aradhanam.

In deference to his vision, the temple has been completely rebuilt providing for a Rajagopuram and additional sannithis for Sri Thayar, Sri Lakshmi Hayagreevar, Sri Sudarsana Azhawar, Sri Andal, Sri Danwanthri, Sri Anjaneyar and Swamy Vedantha Desikan. New Sila Moorthis for these sannithis and Utsava Moorthis for all moolavars and Sri Nammalvar, Sri Bhasyakarar and Sri Swami Desikan have been installed in the temple through the efforts of Sri Vaikuntanatha Perumal Baktha Jana Sabha, and samprokshanam was performed on 28-06-2007

Now after a period of 12 years, the temple premises and certain utilities required renovation and reconditioning. These works were undertaken after Balalayam on 11-04-2019 and nearing completion and the Samprokshanam is fixed for 8th sep. 2019.

## INVITATION 08-09-2019

The **Ashtabandana Maha Samprokshanam** for the Second time after these renovations is proposed to be held on 8th Sep.2019 sunday between 9.00 am. to 10,30 am,

All the devotees and general public Bakthas are requested to participate in the Samprokshanam Vaibahavam and receive the blessing of the Lord and the Acharyas.

The Programme will commence on 6th Sep. 2019 and will last for 3 days.

Contribution for this great event may be sent through Crossed cheques / drafts payable at KVB to the undermentioned address. New Vasthram, Temple Utilities and Vessels may also be donated for temple use.

May also be paid online to SB A/c.No.1227-155-00000-3704 IFSC Code:KVBL0001227 under intimation to

**S. Ramaswamy,**
Secretary, Trustee

1/486, 3rd Street, Karthikeyapuram, Madipakkam, Chennai - 600 091.
Tel:044 22474518 Mobile:98418 29754

**Smt. Devaki Venkatachari,**
President, Trustee

**Sri Vaikuntanatha Perumal Baktha Jana Sabha**
Palayaseevaram 631 606.

ஸ்ரீ:



ஸ்ரீ வைகுண்டவல்லி நாயிகா ஸமேத, ஸ்ரீதேவி, பூதேவி ஸஹித ஸ்ரீ வைகுண்டநாத பரப்ரம்ஹணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

# ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் திருக்கோயில்

பழையசீவரம்




**ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண,**
**அஷ்டபந்தன மஹாபிரதிஷ்டை**
**மஹா ஸம்ப்ரோக்ஷண ஆஹ்வானப் பத்திரிகை**

## SRI VAIKUNTANATHA PERUMAL BAKTHA JANA SABHA

**(Regd. Society No.13/2003,Regd.U/S 12AA of I.T. Act)**

No.143, Agraharam, Pazhayaseevaram Village, & post, Kancheepuram District,
Tamil Nadu - 631 606, India. Phone: 044 - 2247 5418 Mobile: 98418 29754

ஸ்ரீ:



வைகுந்தநாதன் என் வல்வினை மாய்ந்தற, செய்குந்தன் தன்னை யென்னாக்கியென்னால் தன்னை
வைகுந்தனாகப் புகழவண் தீங்கவி செய்குந்தன் தன்னை யென்நான் சிந்தித்தார்வனோ. – திருவாய்மொழி 7.9.7

ப்ரத்யாதிஷ்ட புராதன ப்ரஹரண க்ராம: க்ஷணம் பாணிஜை: அவ்யாத் த்ரீணி ஜகந்த்ய குண்ட்ட மஹிமா வைகுண்ட்ட கண்டீரவ:
யப் ப்ராதுர்ப்பவநா தவந்த்ய ஜடரா யாத்ரு சிகாத் வேதாஸாம் யாகாசித் ஸஹஸா மஹா ஸுரக்ருஹ ஸ்த்தூணா பிதாமஹ்யபூத் – ஸ்வாமி தேசிகன்

## முன்னுரை

காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தில், காஞ்சிபுரம் திவ்ய தேசத்திலிருந்து கிழக்கே 18 கி.மி. தொலைவில் காஞ்சிபுரம் – செங்கல்பட்டு பேருந்து மார்கத்தில், இன்று சிற்றூராய்க் காட்சி அளிக்கும் பழையசீவரம், தமிழகத்தில் ஆண்ட பேரரசுகளான பல்லவர் மற்றும் சோழர்கள் காலத்தில் மிகச் சிறந்த ஊராட்சி முறையைக் கொண்டு விளங்கிய பேரூராக விளங்கி இருந்தமைதனை, அழிந்த நிலையில் இருந்து ஆன்மீகப் பெரியோர்களால் தற்பொழுது புதியதாக கண்டுபிடிக்கப்பட்டு புனரமைப்புப் பணி நடைபெற்று வைகுண்டநாதப் பெருமாள் கோவிலின் அதிட்டானக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் மலைவளம் பாலாறு வேகவதி மற்றும் செய்யாறு சங்கமிக்கும் முக்கூடலின் வட கரையில் இன்று சிற்றூராய் காட்சி அளிக்கும் பழையசீவரம் சோழர்காலத்தில் சீயபுரம் என கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் உள்ள பிறிதொரு கோயிலான இலக்குமி நரசிம்மப் பெருமாள் கல்வெட்டுகளில் இவ்வூர் சீயபுரம் எனக் குறிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட வைகுந்தப் பெருமாள் கோவில் ஊரின் நடுவில் அமைந்துள்ளதால் முற்காலத்தில் இக்கோயிலே இவ்வூரின் மூல தெய்வமாக விளங்கி இருத்தல் வேண்டும். மேலும் இலக்குமி நரசிம்மர் கோவிலை விட காலத்தால் முற்பட்ட கோவிலாக வைகுந்தப் பெருமாள் கோவில் விளங்குகிறது. இதனை புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. மண்ணுக்கடியில் புதைந்து இருந்த வைகுந்தப் பெருமாள் கோவிலின் அதிட்டானப் பகுதிகளை வெளிக்கொணர்ந்த பொழுது தொண்டை கல்வெட்டுகளும், சோழர் ஆட்சியை நிலைநிறுத்திய முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

புதியதாக ஊரின் மையத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருமாள் கல்வெட்டுகளில் விண்ணபுர ஆழ்வார் எனக் குறிக்கப்படுகிறார். இக் கோயிலின் கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி சீயபுரத்தின் மையப்பகுதியாக விளங்கி வந்துள்ளது. இது விண்ணபுரம் எனக் குறிக்கப்பட்டது. இவ்வூரை ஊர் பொது சபையாகிய பெருங்குறி சபையார் ஆட்சிபுரிந்து வந்தனர். கி.பி.9–ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தழைத்தோங்கிய ஊராட்சி மன்றம் இவ்வூரில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வந்துள்ளமையை இந்த விண்ணபுர கோயிலில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறது.

மேலும் உத்திரமேரூர் ஊர் அவை வாரியத்திற்கும் நிகரான ஊராட்சி முறை இவ்வூரிலும் நிலவி ஊரை பரிபாலித்து வந்துள்ளது என்பதையும் ஊர் வாரியத்தில் இடம் பெற்ற பெருங்குறி பெருமக்கள் ஊர் சபையின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கியதுடன் ஊர்ச்சபையின் கட்டளைக்கு அடிபணிந்து சொத்துக்கணக்கு காட்டி சத்தியம் செய்து வாரியப்பணி ஆற்றினர் என்பதையும் அறிய முடிகிறது. தமிழக வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சான்றுகளை புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட வைகுந்தப் பெருமாள் கோயிலில் அதிட்டானப் பகுதி தாங்கி உள்ளமை தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோவில் போன்று பழைய சீவரம் வைகுந்தப் பெருமாள் கோவிலும் தமிழக வரலாற்றுக்கு பெருமை சேர்க்கும் கல்வெட்டுகளை தன்னகத்தே கொண்டடுள்ளது எனக் கூறினால் மிகையன்று.

(மேலே எழுதப்பட்டவை இந்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் (2004) குறிப்புகளின் ஒரு பகுதியாகும்)

11–11–2002 அன்று பழைய சீவரத்திற்கு ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மன் ஸம்ப்ரோக்ஷணத்திற்கு ஆத்யக்ஷம் வகிக்க வந்தபோது ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமிகள் கடாக்ஷத்தில் இக்கோயிலின் நிலைமை பட்டது. ஸ்ரீ வைகுண்டநாதன், ஸ்ரீதேவி பூதேவி இவர்களின் சிலா மூர்த்திகள் வெகு நேர்த்தியாய் சேவை சாதிப்பதைக் கண்டு உள்ளம் பூரித்தார். இத்தகைய புராதன மூர்த்திகள் திருவாராதனம் இன்றி இருப்பதைக் கண்டு மிகவும் கிலேசப்பட்டார். ஸ்ரீமதாண்டவன் இக்கோயிலை நூதனமாய் புனர் நிர்மாணம் செய்ய இக்கிராமத்தார் முயற்சி செய்து முடிக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி அதற்கான அனுக்கிரஹமும் செய்தாயிற்று.

அவ்வண்ணமே ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளப்படி இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டு சென்ற 2007–ஆம் அண்டு சர்வஜித் வருடம் ஆனிமாதம் 28–06–2007அனுஷ நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தல் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடை பெற்று வழிபாட்டுக்கு வந்தது. அன்றிலிருந்து இன்றளவும் தினமும் இரண்டு கால ஆராதனத்துடன் தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது. முக்கிய நாட்களில் உற்சவாதிகளும் யதாசக்தி நடத்தப்படுகிறது முக்கியமாக பங்குனி உத்திரம் கல்யாண உத்ஸவம், ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்திரங்கள், வைகுண்ட ஏகாதசி கருடசேவை ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மப் பெருமாளின் பிரம்மோத்ஸவம், காஞ்சி ஸ்ரீதேவாதி ராஜன் தைமாத மகா சங்கராந்தி விஜயம் முதலிய வைபவங்கள் இக்கோயிலில் 2010–ஆம் வருடம் முதல் புதிய வாகன மண்டபத்தில் சிறப்பாக நடைபெருகிறது. இந்த நூதன திருக்கோயில் புனருத்தாரண ஜீர்ணோத்தாரணம் மீண்டும் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டு கோயில் மூர்த்திகள் விமானங்கள் துவஜஸ்தம்பம் ஆகியவை பாலாலயத்தில் 11–04–2019 முதல் ஏள்ளியிருக்கிறார்கள்

இந்த ஜீர்ணோத்தாரண கைங்கர்யங்கள் நிறைவு அடையவுள்ளன, அதையொட்டி இந்த திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம் மீண்டும் நடைபெறஉள்ளது.

## ஸம்ப்ரோக்ஷண பத்திரிகை 08-09-2019

ஸ்ரீயப்பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அப்ராக்ருத திவ்ய மங்கள ஸ்வரூபியாய் சகல ஜீவகோடிகளையும் ரக்ஷிக்கும் பொருட்டு, க்ஷீரநதி (பாலாறு) பாஹுநதி (செய்யாறு), வேகவதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமமாகின்ற தக்ஷிணத்திரிவேணீ ஸங்கமத்தின் வடகரையில் அமைந்துள்ள சீயபுரம் என்றும் ஸ்ரீபுரம் என்றும், கல்வெட்டுகளில் வைகுண்ட விண்ணகரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள இக்கால பழைய சீவரம் கிராமத்தில், ஸ்ரீம்ருகண்டு முனிவருக்கு ப்ரத்தயக்ஷமானவருமான, ஸ்ரீ வைகுண்டவல்லி நாயிகா ஸமேத, ஸ்ரீதேவி பூதேவி ஸஹித ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாளுக்கு, வைகுண்டநாதன் கிருபையாலும், நிகழும் விகாரி வருஷம் ஆவணி மாதம் 22–ஆம் தேதி (08–09–2019) ஞாயிற்றுக் கிழமை தசமி திதி மூல நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் துலா லக்னத்தில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீவைகானஸ ஆகம விதிப்படி நடைபெறுகிறபடியால் பக்த பாகவத மஹா ஜனங்கள் அனைவரும் ஸம்ப்ரோக்ஷண வைபவங்களில் கலந்து கொண்டு ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாளின் பரிபூர்ண கிருபாகடாக்ஷத்தையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் வராஹ மஹாதேசிகனின் அனுக்கிரஹத்தையும் பெற்று உய்யக் கோருகிறோம். இவ்வைபவங்கள் 6–9–2019 தொடங்கி 3 நாட்கள் நடைபெறும்.

இம்மகா வைபவத்திற்கு தங்களால் இயன்ற பொருள் உதவியை செக்குகள் டிராஃப்டுகள் மூலமாக ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாள் பக்த ஜன சபா என்ற பெயரில் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம். புது வஸ்திரங்கள் மற்றும் கோயில் உபகரணங்கள், பாத்திரங்கள் கொடுக்கலாம். நன்கொடை ரசீது வழுங்கபடும்

**On line to S.B. A/c:1227-155-00000-3704 IFSC Code:KVBL0001227 Under Intimation to**


**S. ராமஸ்வாமி,**
செயலர், ட்ரஸ்டி

1/486 3–வது தெரு, கார்த்திகேயபுரம், மடிப்பாக்கம் சென்னை – 600 091
Phone:044-2247 4518 Mobile:9841829754

**திருமதி தேவகி வெங்கடாச்சாரி,**
தலைவர், ட்ரஸ்டி

இங்ஙனம்
**ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் பக்த ஜன சபா**
பழைய சீவரம் 631 606


### ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்கிரீவர் ஸன்னதி

இத்திருக்கோயிலில் ஸர்வ வித்தைகளுக்கும் அதிபதியான ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்கிரீவர் மிக ஆச்சர்யமான விக்ரஹத்துடன் எழுந்தருளியுள்ளார். இது கல்வி கற்கும் எல்லா மாணவ மாணவி, வித்யார்திகளுக்கும் ஒரு வரப் பிரஸாதமாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

### ஸ்ரீ சக்ரத்தாழ்வார்

எந்தவித இடர்கள், ஆபத்துக்கள் வரினும் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரைச் சேவித்தால், அர்ச்சித்தால் அவை சூரியனைக் கண்ட பனி போல நீங்கும் என்பது உறுதி. இத்திருக்கோயிலில் அற்புதமான திவ்ய மங்கள விக்ரஹமான ஸ்ரீ சுதர்ஸன ஆழ்வாரின் ஸன்னதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. எல்லா பக்தகோடிகளுக்கும் சக்கரத்தாழ்வார் ஒரு வரப்பிரஸாதியாக இருப்பார் என்பது உறுதி.

### ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்ரீ தன்வந்திரி

மேலும், ஸகலவித கோரிக்கைகளும் நிறைவேறவும், ஆரோக்கியமான வாழ்விற்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஸ்ரீ தன்வந்திரி ஸன்னதிகளும் ஆஸ்தீகப் பெருமக்களுக்கும் பேருதவியாய் இருக்கும்.

எல்லாவற்றிகும் மேலாக சகல செல்வங்களும், சேஷமங்களும், பேரின்பமும் பெறுவதற்கு பெரிய பிராட்டி ஸ்ரீவைகுண்ட வல்லியும். ஸ்ரீவைகுண்டப் பெருமாளும் அருள் புரிவர் என்பது உறுதி.